
# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

குடில் : 1

விருந்து : 2

மூத்த மொழி தமிழ்



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

ஆகஸ்ட் 2019

நற்றமிழ்க்குடில்

ஆகஸ்ட் 2019


ஆசிரியர் குழு : மு. சத்யா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

அ. ஸ்டெல்லாமேரி
அ. பர்ஸானா
ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழிலக்கியம்
மூன்றாமாண்டு

சா. யோகேஸ்வரி
அ. உமா மகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேதுகுமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

பேராசிரியர் சே. கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை
சோகா இகெதா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
சென்னை - 600 099.

விலை : ரூ. 10/-

## உள்ளே...


தலையங்கம்

அன்பு குடிலுக்கு

கவிதைச் சாரல்

தோழிக்குக் கடிதம்

பழங்கதை கேளு

சுட்ட கதை

சிரிப்போ சிரிப்பு

சொல்லோடு விளையாடு

மலரே

அறிவோம் அறிஞர்களை

சித்திரச் சிறுகதை

சொற்குவை

நூல் அறிவோம்

தூரிகைத் தூரல்கள்



இகேதா கலை மற்றும் அறிவியல் மகளிர் ...

5


# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்


குடில் : 2 விருந்து : 1

*சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு*

*ஆகஸ்டு 2019*

*அன்பு குடிலுக்கு...*

சில்லென்ற மழைச்சாரலில்
தோழிக்கு கடிதம் எழுதி
அன்பின் ஒரு மடலை உருவாக்கி
என்னைச் செதுக்கிய தாய்க்கு
வணக்கம் சொல்லி
இயற்கையெனும் ஆழிப்பேரலையில்
வாழ்வின் தேடலைக் காண
தங்க மங்கையாய் உருவெடுத்து
கவியரங்கக் கவிதையில்
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய் மாறி
கனவு மெய்ப்பட
கண்ணியம் காக்கும் பெண்மையோடு
நூல் பல கற்று
சொல்லோடு விளையாடி
சித்திரச் சிறுகதையின் கருவாய்
தூரிகைத்தூவும் தூரல்களாய்
நற்றமிழ் குடிலில் சங்கமித்தேன்...

**குடிலின் தமிழ்ச் செல்வம்**
**குறைவின்றிப் பெருகட்டும்!!**

முனைவர் அ.கோகிலா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.

## தலையங்கம்

# தமிழ் அவமானம் அல்ல 'அடையாளம்'

தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா! என்று கூறி வந்தோம். ஆனால் அப்படிப்பட்ட நம் தமிழைப் பேசுவதற்கு இன்றையதமிழ் மக்கள் வெட்கப்படுகின்றனர். உலகில் முதலில் தோன்றிய மனிதன் பேசிய மொழி தமிழ். தமிழ்நாட்டில் பிறந்த தமிழர்களாகிய நமக்கு தமிழின் பெருமை தெரியவில்லை என்றால் அதைவிட அவமானம் வேறு இல்லை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்ற பாரதியின் கூற்றுத் தமிழின் சிறப்பைப் பறை சாற்றுகின்றது. உலக மொழிகளிலே உயர்ந்த மொழியாக, இனிய மொழியாக விளங்கிய தமிழ் இன்றும் தன்னிலையில் தாழாமல் தலைநிமிர்ந்து நிற்கும் மொழியாகத் திகழ்கின்றது. தமிழின் செம்மைப் பண்பை அறியாத சிலர் அதன் சிறப்பினைச் சீர்குலைக்க நினைக்கின்றனர். இளம் பிள்ளைகளின் மனதில் தாய்த்தமிழின் இன்பத்தை விதைக்க வேண்டிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் இன்று வேற்று மொழியின் வேர்களுக்கிடையே சிக்கிக் கிடப்பது வேதனை அளிக்கிறது. தடைகள் பல தாண்டி தமிழ் படிக்கக் கல்லூரியைத் தேடி வரும் மாணவர்களை இன்றைய சமூகம் ஏளனமாய்ப் பார்க்கிறது. வீட்டுக்கு வரும் உறவினர்களின்என்ன படிக்கிறாய் என்ற கேள்விக்கு, தமிழ்

படிக்கிறேன் எனத் தமிழ் மாணவர் தரும் பதில் முகம் சுளிக்க வைக்கின்றது. தமிழ் படித்து?? என்ற ஏளனப் பார்வையும் அம்மாணவரின் மேல் விழுகிறது. அப்படிக் கேட்பவர்கள் தமிழ்மொழியின் அருமையை அறியதாதவர்கள். தமிழர் வரலாறு, தமிழின் வரலாறு, தமிழின் சிறப்பு, தமிழின் தனித்தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்கின்ற அரிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே வருத்தத்திற்குரியது.

பல்வேறு துறை சார்ந்து தமிழர்களின் கல்விநிலை மாற்றம் பெற்று வருவது பாராட்டுக்குரியதே. எனினும் வருமானம் ஈட்டுவதற்காக வாழ்க்கையைத் தொலைத்துவிடும் இயந்திரத் தன்மைக்கு மட்டுமே அக்கல்வி பயன்படுகிறது. தமிழ் சார்ந்த கல்வியோ மனிதம் நிறைந்த வளமான வாழ்வியலை உருவாக்கம் செய்கிறது. எந்தத் துறையில் படித்தாலும், பணிபுரிந்தாலும் தமிழ் என்று சொல்லும் பொழுது ஒரு தனித்தன்மையும் பெருமையும் தோன்றும்.

தமிழ்த் துறையில் பயின்றவர்கள் பேச்சாளராக, எழுத்தாளராக, ஊடகவியலாளராக, கவிஞராக, ஆசிரியராக, பேராசிரியராக, ஆராய்ச்சியாளராக, ஆட்சியாளராக, விஞ்ஞானியாகப் பல்வேறு துறைகளில் சிறந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

வாழ்வை வளமாக்கும் தமிழ்
நம் அடையாளம்!!
தமிழ் மரபு காத்து...
தன்மானத்தோடு வாழ்வோம்!!

மு.சத்யா,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு.

# கவிதை மழை

## இளம் கதிர்

கல்விஎன்னும் சோலையினில்
இளங்கதிராய் முளைத்து...
பள்ளி என்னும் கோவிலில்
இளந்தீபமாய் ஒளிர்ந்து...
ஆண்டுகள் பலஓடினும்
பள்ளிபருவத்தின் ஞாபகம்...
தத்தித் தவழ்தோடிய காலம்
மீண்டும் வரவேண்டும்
என்ற ஆதங்கம்!

நினைவுகளை நினைவூட்டும்
காலத்தின் சாதகம்...
கண் இமைக்கும் நொடிக்குள்
வந்துவிட்டது அடுத்ததொரு
கல்வி வாகனம்...

சற்றே வியந்தேன்
கல்லூரியின் சாயலைப் பார்த்து...
உள் நுழைய தயக்கம்!
நுழைந்த பின் சூழலைப் பார்த்துகலக்கம்!
மதிப்பெண் ஆயுதம்
தாக்குமோ என்ற மயக்கம்!!

மதிப்புக் கல்விக்குள் நுழைந்த கர்வத்துடன்....
தொடர்கிறது என் கல்லூரி பயணம்

பி.லோகஸ்ரீ,
வணிகவியல் (ஆ), இரண்டாமாண்டு.

# கவிதை மழை

## இளம் கதிர்

கல்விஎன்னும் சோலையினில்
இளங்கதிராய் முளைத்து...
பள்ளி என்னும் கோவிலில்
இளந்தீபமாய் ஒளிர்ந்து...
ஆண்டுகள் பலஓடினும்
பள்ளிபருவத்தின் ஞாபகம்...
தத்தித் தவழ்தோடிய காலம்
மீண்டும் வரவேண்டும்
என்ற ஆதங்கம்!

நினைவுகளை நினைவூட்டும்
காலத்தின் சாதகம்...
கண் இமைக்கும் நொடிக்குள்
வந்துவிட்டது அடுத்ததொரு
கல்வி வாகனம்...

சற்றே வியந்தேன்
கல்லூரியின் சாயலைப் பார்த்து...
உள் நுழைய தயக்கம்!
நுழைந்த பின் சூழலைப் பார்த்துகலக்கம்!
மதிப்பெண் ஆயுதம்
தாக்குமோ என்ற மயக்கம்!!

மதிப்புக் கல்விக்குள் நுழைந்த கர்வத்துடன்....
தொடர்கிறது என் கல்லூரி பயணம்

பி.லோகஸ்ரீ,
வணிகவியல் (ஆ), இரண்டாமாண்டு.

## இயற்கை...

எல்லையில்லாமல் எங்கும்
பரவியிருக்கும் நீலக் கூந்தல்...
பச்சை பசேலென மலைகளாய்
படர்ந்திருக்கும் உருவம்...
நிழலாய் நீண்டு விரிந்த
விரல்களாகக் காடுகள்...
எழில்மிகு பாதங்களாய்
வர்ணப் பூக்கள்...
வேகமாக ஓடும் நதியில்
உன் கால்கள் எத்தனையோ?
வியக்கின்றேன் உன் அழகில்...!!

உன்னால் உயிர் பெறுகின்றன
உலகின் உயிரினங்கள்...
உன்னை அழிப்பதற்கு
எவருக்கு மனம் வரும்??
அழிக்கின்றனரே....
அவருக்கு இருக்குமோ இதயம்??!!

இயற்கையெனும் அரிய செல்வத்தை
இனியேனும் காப்போம்... போற்றுவோம்!

சீ.திவ்யலட்சுமி,
இளங்கலைக் கணிதம், இரண்டாமாண்டு.

கடலே!
உன் நீளத்தையும் அகலத்தையும்
நான் முழுமையாகப் பார்த்ததில்லை...
ஆனாலும் உன்னைப் பிடிக்கும்!

உனக்கும் என்னைப் பிடிக்கும்
என்றே நினைக்கிறேன்...
அதனால்தான்
உன் அலைக்கைகளால்
அன்பாய் என்னைத் தொடுகிறாய்!

காலங்கள் மாறினாலும்
ஆண்டுகள் ஓடினாலும்
பருவங்கள் மாறினாலும்
உன் அழகுமட்டும்
குறையவில்லை எப்படி?

உன் அழகை ரசிக்கும் நான்
உன்னிடமுள்ள
குறையையும் கண்டுபிடித்துள்ளேன்...
என்ன தெரியுமா?
உன் கோபம் என்னும் சுனாமி
என் விழிகளின் கண்ணீரோடு
உப்பாய்க் கரைகிறது.

உன் அலைகள் தரும் மெல்லோசைகள்
என் மனதில் எழும் இன்னிசைகள்!!

செ.புகழேந்தி,
இளங்கலைக் கனிணியல், இரண்டாமாண்டு.

# ஆசிரியர்...

கல்லாக நான் இருந்தேன்
சிற்பியாக நீ வந்தாய்...
கோணல்களைச் சரிசெய்து
ஓர் அழகிய சிற்பமாகச்
செதுக்கிவிட்டாய் என்னை!

எழில் கொஞ்சும் தமிழ்மொழியை
மயில் கொஞ்சும் உன் நடையில்
உணரவைத்தாய் நீயே!

படிப்பது புரியாமல்
பரிதவித்து நான் சலிக்க...
சலிக்காமல் ஊக்கமளித்துச்
சரிசெய்தாய் என்னை!

சோர்ந்துபோன நேரத்தில்
துடிப்பாக முயற்சியைத் தூண்டும்
சுடர்விளக்காய்...
தன்னம்பிகை இழந்த போது
நம்பிக்கையெனும்
கலங்கரை விளக்காய் நீ வந்தாய்!!

என் வாழ்வில் வெற்றி ஒளியே...
என் ஆசிரியரே நீ வாழ்க!!!
என்னைப்போல் இன்னும் பலருக்கு
வழிகாட்டியாக என்றும் வாழ்க!!!

எ.தனலட்சுமி,
வணிகவியல்(ஆ), இரண்டாமாண்டு.

## விவசாயி...

எம் உயிர் உம் உழைப்பில்...
உண்டுவாழ்கிறோம் உங்களால்
ஆனாலும்...
அதற்குரிய மரியாதையை
தருவதில்லை நாங்கள்...
என்றாலும்...
உன் தொழிலை விட்டுவிடவில்லை நீ !!

உணவை விற்பவன் பணக்காரன்...
உற்பத்தி செய்பவன் ஏழைக்காரன்??
இந்நிலை மாற்றிட...
இத்தலைமுறை மாறவேண்டும்!

கதிரை தெய்வமாகக் கொண்டு
தன்னை அர்ப்பணிப்பவன் விவசாயி...
விவசாயம் இல்லையெனின்
உயிர்கள் இல்லை... உலகம் இல்லை!

விவசாயம் செழிக்க...
விவசாயிக்கு உதவுவோம்!!
மண்செழித்தால்தான்...
மனிதம் செழிக்கும்!!!

சே.சங்கீதா,
இளங்கலை, இயற்பியல் இரண்டாமாண்டு.

## வாழ்வின் தேடல்

வாழ்வில் மகிழ்ச்சியைத் தேடினேன்...
வரும் துயரமெல்லாம் மறக்க..!

மழைமேகம் தேடினேன்...
மண்ணின் வறட்சி போக்க..!

கண்ணீரைத் தேடினேன்
ஏமாற்றத்தின் ஆழம் அறிய..!

உறவுகளைத் தேடினேன்...
துன்பம் மறந்து தூங்க..!

பயிற்சியைத் தேடினேன்...
முயற்சிசெய்து வெற்றிபெற..!

தனிமையைத் தேடினேன்...
தவத்தை மேற்கொள்ள..!

அனுபவம் தேடினேன்...
அர்த்தமுள்ள வாழ்வைப் புரிந்துகொள்ள..!

முதுமையைத் தேடினேன்...
உறவுகளைப் புரிந்துகொள்ள..!

வார்த்தைகளைத் தேடினேன்...
ஓர் கவிதை எழுத...!

இ.யோகேஸ்வரி,
இலங்கை உயிர்வேதியியல், மூன்றாமாண்டு.

## மேகம்...

சுடும் சூரியனின் வடிகட்டி - நீ
சுடாமல் குளிரும் பனித்தொட்டி!
அழகிய உடையா மழைக்கட்டி - நீ
ஆதவனின் தோழி வெள்ளிக்கட்டி!

விண் என்னும் கடலில் நீ
வெண்கப்பலாய் மிதக்கிறாய்
என் மனதில் தோன்றும் உருவமெல்லாம்
உன்னுள் எப்படிக் காட்டுகிறாய்?!

நான் சிரிப்பதற்காக அழுகிறாய்
வாழ்கிறாய் பூமிப் போர்வையாய்!
உன் வண்ணம் மாறும் ரகசியத்தை
என்னிடம் மட்டும் சொல்லடி தோழீ...!

ரா. வசுதா,
வணிகவியல் (இ), முதலாமாண்டு.

## நட்பு...

எம் பள்ளிப் பயணத்தின்
இறுதி நாட்களில்
எனக்காக எழுதிய
உனது பக்கங்களை
சில நாட்கள் கடந்து
நான் வாசிக்கும் போது....
அழகிய நினைவுகளை
எனக்குப் பரிசளிக்கிறாய்!!

இதழோரம் மலரும் புன்னகையும்
இமையோரக் கண்ணீர் துளியும்
உன் பரிசின் அடையாளங்கள்!!

பக்கங்களைப் படித்து முடித்ததும்
உன் இனிமையை உணர்கிறேன்
இந்த அழகிய தருணங்களில்...

ஆ.வள்ளி
இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

**ஓசை**

இவளின்
வளையல் ஓசை கேட்காமல்...
வானவில்லும் வளையாது!

கொலுசு சத்தம் கேட்காமல்...
இரவும் விடியாது!

சிரிப்புச் சத்தம் கேட்காமல்...
பகலும் முடியாது!

சிரிப்பழகி...
இவள் செய்த
மாயம் என்னவோ??

ஆஷா பிரியங்கா
வணிகவியல் (ஆ), இரண்டாமாண்டு.

## குழல் விளக்கு

உலகின் உயிர்கள்
உறங்கும் நேரத்தில்...
அழகிய மரங்களும்
வண்ண மலர்களும்
உறங்கும் நேரத்தில்...

என் அன்பான அம்மா...
சண்டைபோடும் அக்கா...
சிரித்து விளையாடும் தோழி...
இவர்கள் யாரும்
நான் படிக்கும் நேரத்தில்
என்னோடு விழித்திருப்பதில்லை!

நீ மட்டும் எனக்காக
உன் ஒளி விழியை மூடாமல்
விழித்துக் கொண்டிருக்கிறாய்...!

அழகான இரவில்
எனக்காக ஒளிரும்
ஒளித் தாயே... குழல் விளக்கே...
நீ வாழ்க!!

ம. விஜயலட்சுமி,
வணிகவியல் (இ), முதலாமாண்டு.

அன்புள்ள தோழி....

நான் இங்கு நலம், நீ அங்கு நலமா? வீட்டில் இருக்கும் அனைவரும் நலமா? எங்கள் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை உன்னுடன் பகிர விரும்புகிறேன்.

ஜூலை 26 ஆம் நாள் வெள்ளிகிழமையன்று எம் கல்லூரியில் கலாச்சாரப் பரிமாற்று விழா மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்குப் பாரட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில் ஃப்ளோரிடா பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான முனைவர் முத்துசாமி குமரன் அவர்களுக்கு இராமச்சந்திரன் இகெதா விருதும், டாக்டர் மேத்யூ செரியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது மேலும் சென்னையைச் சேர்ந்த ஐந்து அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்குப் பாரட்டுத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஃப்ளோரிடா பல்கலைகழகத்திலிருந்து வந்திருந்த மாணவர்கள் அனைவரும் தமிழர்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ற வகையில் ஆடை அணிந்து எங்களை மகிழ்வித்தும் எம் கல்லூரி மாணவியர் நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்தி அவர்களை மகிழ்வித்தும் சிறந்த கலாச்சாரப் பரிமாற்று விழா நடைபெற்றது. இந்த மகிழ்சசியான நிகழ்வில் நீ இல்லை என்ற வருத்தம் மட்டும் என்னுள் இருந்தது.

உனக்கு நினைவிருக்கின்றதா...தோழி?

நீயும் நானும் ஒன்றாக உயர் கல்விக் கற்பதாக இருந்தோம். உன் வீட்டிலோ பள்ளி முடித்ததும் இந்தச் சமூகத்தில் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்ற அவலங்களுக்குப் பயந்து சிறு வயதிலேயே உனக்குத் திருமணம் செய்து

விட்டார்கள். திருமணம் முடிந்த பின்பு நீயும், நானும் ஒன்றாக படிக்கலாம் என்றிருந்தோம். உன் புகுந்த வீட்டிலோ இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. காரணம் கேட்டதற்கு மகனே படிக்கவில்லை... மருமகளுக்கு எதற்கு படிப்பு?? என்று கூறிவிட்டார்கள்.

இனிய தோழியே... இந்தக் காலத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகக் கற்கிறார்கள். அதை உன் குடும்பம் உணரவில்லையே என்ற வருத்தமும் கோபமும் எனக்கு உண்டு. அதுமட்டுமில்லை... இப்போதெல்லாம் சமுதாயப் பணிகளிலும் பெண்கள் மிகுதியாய் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கே தொண்டு செய்யும் எண்ணமும் மிகுதியாக உள்ளது. எம் கல்லூரியில் ஐந்து தொண்டு நிறுவனங்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது என்று கூறினேனே அதில் ஒரு நிறுவனத்தையே இயக்குபவர் பெண்தான்.

தோழி... நீ படிக்கவில்லை என்று வருத்தம் கொள்ளாதே உன் மகளை உயர் கல்வி கற்க வைத்து, அதன் மூலம் அனைவருக்கும் தொண்டு செய்ய வேண்டும் எனக் கற்றுக்கொடு!

நாம் அனைவரும் "எனக்கு மட்டும்" என்று வாழாமல் "நமக்கு" என்று அனைவருக்கும் உதவும் எண்ணதோடு வாழ வேண்டும். உன் கருத்தைக் கடிதமாக எழுது தோழி...

அன்றும், இன்றும், என்றும் நம் நட்பு தொடர...
உன் அன்புத் தோழி...

**அ.பர்ஸானா,**
**இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.**

பழமொழி

ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்
பிள்ளை தானாக வளரும்.

விளக்கம்

ஊரான் பிள்ளை என்பது வீட்டிற்கு வரும் மருமகளைக் குறிக்கின்றது. மருமகள் கருவுற்ற நிலையில் பத்து மாதம் அவளுக்கு வேண்டிய சத்தான ஆகாரத்தை கொடுத்தால், வயிற்றில் வளரக்கூடிய பிள்ளை ஆரோக்கியமாக வளரும் இதுதான் இப்பழமொழியின் உண்மையான விளக்கம்.

**பொய்யான விளக்கம்**

தன் பிள்ளைக்கு ஊட்டி வளர்ப்பதை விட, ஊரான் பிள்ளைக்கு ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும் என்று மாறி விட்டது.

**இரட்சண்யா,**
**முதுகலை தமிழ், இரண்டாமாண்டு.**

சுட்ட கதை...

வட போச்சே....

நம்ம முயல் சார் பேரு வடிவேலு. நம்ம ஆமை ஐயா பேரு சந்தானம். ஆமைக்கு மிக நெருக்கமான தோழன் சிங்கம். ஒரு நாள் வடிவேலுவையும் சந்தானத்தையும் கூப்பிட்ட சிங்கம், உங்க ரெண்டு பேருக்கும் மறுபடியும் ஓட்டப்பந்தயம் வைக்கலாம். அதுல யாரு ஜெயிக்கறீங்களோ அவங்களைக் காட்டின் படைத்தளபதியா

நியமிப்பேன்னு சொல்லுச்சி. முயலும் குஷியாக நான் இப்பவே ரெடி'னு சொல்லுச்சி. இப்போ இல்லை நாளைக்கு நான் பந்தயம்னு காட்டு விலங்குகள் எல்லோருக்கும் தகவல் சொல்ல சொல்லுச்சு சிங்கம்.

வடிவேலு முயல் கிளம்பி போனதும் சந்தானம் ஆமை, 'ஏனப்பா இப்படி கோத்து விட்டே' இந்த முறை அவன் முழிப்போடு இருந்து ஜெயிச்சுட்டா என்ன செய்றது?'னு கேட்டது.

அப்படி விட்டுருவேனா என்ன...? பாதையில் ஓர் இடத்தில் நான் ஒளிச்சு இருப்பேன். நீ அங்கே வந்ததும் என் முதுகில் ஏறிக்கோ... நான் உன்னை சுமந்துட்டு ஓடிப் போய் வெற்றிக் கோட்டுக்குப் பக்கத்துல விட்டுடறேன். அப்புறம் என்ன நாளையிலிருந்து நீதான் தளபதி' னு சிங்கம் சொல்லுச்சி.

சந்தானத்துக்கு செம சந்தோஷம். அடுத்த நாள் போட்டி ஆரம்பிச்சுது. வடிவேலு ஊருக்கு முன்னாடி ஓடிட்டாரு. சொன்ன மாதிரி மறைஞ்சு இருந்த சிங்கம் வடிவேலை முதுகில தூக்கிட்டு முயலை நெருங்க ஆரம்பிச்சுது. வடிவேலு சிங்கத்தைப் பாத்ததும் 'வந்துட்டாய்யா வந்துட்டான்'னு பயத்துல இன்னும் வேகமா ஓடிச்சு. அதனால முயல்தான் ஜெயிச்சுச்சாம். ஆமை சோகத்துல வட போச்சே'னு நிற்க, முயலுக்குத் தளபதியா முடிச்சூட்டிட்டு முழிச்சுட்டுக்கு நின்னுது சிங்கம்.

கெடுவான்... கேடு நினைப்பான்...!

ம.பிரதியுஷா,

இளங்கலை ஆங்கிலம், இரண்டாமாண்டு.

## சிரிப்போ சிரிப்பு...

முரளி : பாலு உயிரியல் பாடம் படிக்க மாட்டானாம்!

குமார் : ஏன்?

முரளி : அவன் சைவமாம்.

முரளி : எப்ப பாத்தாலும் இட்லி,பூரி,தோசைன்னு சாப்பிடுரியே ஏன்டா?

பாலு : என்னை யாரும் தண்டச்சோறுன்னு சொல்லிடக் கூடாதுன்னுதான் டா!

முரளி : எதுக்குடா உங்க அப்பா பெயரை எழுதி ஃப்ரிட்ஜ்க்குள்ளே வைக்குறே?

பாலு : அவர் பெயர் கெட்டுடக் கூடாதுன்னு தான்!

பாலு : சார் என் தலையில எறும்பு ஏறுது பாருங்க!

ஆசிரியர் : எடுத்துப் போடாம என்கிட்ட ஏன்டா சொல்றே!

பாலு : நீங்க தானே சொன்னீங்க என் தலையில ஒன்னும் ஏறாதுன்னு!


ச. தமிழ்ச்செல்வி,

இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.

இன் தமிழ் சொற்கள் நூறு...
இதில் ஒளிந்திருக்கும் சொற்களைக் கூறு!

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | யா | ரி | வ | ட | தா | சு | ரி | ப | ன் | ய | டி | ண் | ப<br>ா |
| ரூ | ப் | பி | தி | ரு | க் | கு | ற | ள் | தி | ரா | ம | ல் | ரு |
| ணு | ல் | தா | மா | ரி | ஏ | க | வு | சி | தி | ய | ம | ரு | ர் |
| து | சா | ட் | ரி | கா | லா | ம் | வா | ஜோ | ரி | ம் | ச | ன் | சி |
| ம் | க | டு | க | ரி | தி | மா | ல் | சா | த | ரு | க | வு | ம் |
| பு | ம் | ல | வ | ய | ர | த | ன் | ப | ம | வ | ல | ல் | த |
| ப் | க | ல | ரி | ல | கா | கி | ச | ரை | த | ம | ந | செ | ந |
| ரு | வ | த | ை<br>வ | இ | வி | லி | க | வி | ம | வ | கி | ன் | வ |
| கி | ரி | ம | க | த | சா | ர | ஞ | ச | வி | ண | ம | யி | ப |
| ன் | ப | ந | ை<br>த | ஞ | ள | டு | ட் | பா | ல் | யி | கு | னி | ல |
| தி | ன் | டி | பா | ரி | சா | க | ரி | த | னி | ரி | ய<br>ா | ன் | கு |
| ழு | ரி | வு | ன | க | ன் | ப | தி | த் | ர் | பா | ரி | பொ | ம |
| ஆ | யா | ச | ரி | தா | மு | ய | ரி | தா | ப | யா | ன | ன் | சி |

இரட்சண்யா,
முதுகலை தமிழ், இரண்டாமாண்டு.



காந்தள் அல்லது கார்த்திகைப் பூ என அழைக்கப்படுகின்ற செங்காந்தள் தமிழ்நாட்டின் மாநில மலர் எனும் சிறப்புக்குரியது. கார்த்திகை மாதத்தில் பூக்கும் இந்தப்பூ தீ கொழுந்துவிட்டு எரிவது போல் காணப்படுவதால் இதை அக்னிசலம் என்றும் அழைப்பர். மழைக்காலத்தில் வனப்புடன் காணப்படுவதால் தோன்றி என்றும் அழைப்பர். இதனை நாட்டு மருத்துவத்தில் வெண்தோண்டி என்பர். பூக்களின் நிறம் வேறுப்படுவதால் வெண்காந்தள் என்றும் செங்காந்தள் என்றும் வருணிப்பர்.

செங்காந்தள் மலரில் தேன் அதிகமாக காணப்படுவதால், எப்போதும் தேனீக்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்குமாம். செங்காந்தள் மலர் மட்டும் வாடினாலும் உதிர்வதில்லை.

செங்காந்தள் புற்றுநோய், மேகநோய், வாதநோய், மூட்டு வலி, தொழுநோய், தேள்கடி, பாம்புக்கடி, ஆகியவற்றைக் குணப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகிறது.

சங்க இலக்கியத்தில் அன்பின் அடையாளமாகக் தலைவன் தலைவிக்கு அளித்த கையுறையாகவும், தலைவியின் அழகிய சிவந்த விரல்களுக்கு உவமையாகவும் செங்காந்தள் மலர் சிறப்புற்றிருந்தது.

சா. யோகேஸ்வரி,
இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.



## அறிவோம் அறிஞர்களை...

பெயர் : கோ.மோகனரங்கன்

ஊர் : ஆலந்தூர், சென்னை.

தோற்றம் : 01.06.1942.

பெற்றோர் : கோ.மீனாம்பாள், மா.கோபால்

குறும்பா, குறுந்தொகையின் குழந்தைகள் என்னும் பெயர்களில் ஹைக்கூ கவிதைகள் எழுதியுள்ளார். 'தாத்தாவுக்கு தாத்தா' என்னும் தலைப்பில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வரலாற்றை எழுதியுள்ளார். 'தலைவாசல்' போன்ற கவிதை நாடகங்கள் வானொலியில் ஒளிப்பரப்பாகி பாரட்டைப் பெற்றுள்ளது. கனவுப் பூக்கள்,கல்வி உன்னை காப்பாற்றும்,அறம் வளர்ப்போம் வாருங்கள், அறிஞர்கள் ஆவோம் வாருங்கள், இந்தியா எங்கள் சொத்து,அழகிய தமிழில் எழுதுங்கள் என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.

மு.வ பற்றி இவர் எழுதிய 'வணக்கத்துக்குரிய வரதராசன் கதை' என்னும் நூல் 1982ஆம் ஆண்டு தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது. 'இமயம் எங்கள் காலடியில்' என்னும் கவிதைநூல் தமிழக அரசின் பரிசினை பெற்றுள்ளது. பொன்னம்மா ஒரு புதுமை பெண்' என்னும் நாடக நூல் எவி.எம். அறக்கட்டளையின் தங்கப்பதக்க பரிசினை பெற்றது. பாவேந்தர், குழந்தை இலக்கிய மாமணி, முத்தமிழ்கவிஞர், கலிவேந்தர், விஜி.பி.விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

**சா. உமாமகேஸ்வரி,**

**இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு.**

## குளத்தில் மீன் கண்ட போலி கனவு

ஊருக்கே அழகு சேர்த்து கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது அந்த பெரிய ஆலமரம்.... பழுத்த இலைகளும் பச்சை இலைகளும் சேந்து சல சலனு ஊர்க்கதை பேசறதைப் போல காத்துல அசையும் ஆலமரத்தோட கிளைகளைப் பாக்கறதுக்கே ஆசையா இருக்கும்.

கீச்சு கீச்சென்று பறவைகளின் ஒலி... விழுதுகளில் ஊஞ்சலாடும் பொட்டுப் பொடுசுகளின் ஆரவாரம்...சீட்டுக்கட்டு, தாயம், ஆடு புலியாட்டம் போன்ற விளையாட்டுகளோடு ஊர் வம்பினையும் சேர்த்தே உருட்டும் இளைஞர்களின் சத்தம்... காத்தாட வந்து கதையளக்கும் பெருசகளின் பேச்சு சத்தம்... இத்தனை சத்தத்துக்கும் நடுவுல வேலையை முடிச்சிட்டு வந்தக் களைப்பில் கொஞ்ச நேரம் கண்ணசந்து கட்டையச் சாய்க்க வந்த உழைப்பாளிக ஒருபக்கம்னு எப்போதும் அந்த ஆலமரம் திருவிழாக் கோலத்தோடதான் காட்சியளிக்கும்.

ஆலமரத்திற்கு வலதுபுறத்தில் நீர் நிறைந்த மிகப் பெரிய குளம் ஒன்னு இருந்துச்சு...அந்தக் குளத்துல மீன்களும் நண்டுகளும் ஏராளமாக இருந்தன... மீன் கொத்திப் பறவைகளும் கொக்குகளும் இறையுண்ட மகிழ்ச்சியில் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தன.

இத்தனை ஆரவாரங்களுக்கிடையே அந்தக் குளத்தில் ஒரே ஒரு மீன் மட்டும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டு இருந்தது. அப்போது அங்கே மீன் பிடிப்பதற்காக வந்த மீனவனின் வலையில் அந்த மீன் சிக்கிக் கொண்டது... அவன் அந்த

மீனைப் பார்த்து நான் உன்னை பிடிக்கும் போது நீ ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த... உன்னை பிடிச்சதுல இருந்து உன் அழகை நான் இரசிச்சிக்கிட்டே இருந்தேன். ஆனா... இப்போ நீ ஏன் அழுதுகிட்டே இருக்கனு கேட்டான். அதற்கு அந்த மீன் எனக்கு ஒரு கனவு வந்து அதனால்தான் அழுதேன் என்றது.

ஒரு அழகான நாடு. நாடுதான் அழகு... ஆனால் அந்த நாட்டில் மக்கள் அனைவரும் சிறிது கூடச் சுதந்திரம் இன்றி வாழ்கின்றனர். இந்நாட்டை பேரழகு மிக்க அரசனும், அரசியும் ஆண்டு வந்தனர். அங்கு வாழ்ந்த மனிதர்களில் ஒருவர் மட்டும் தினமும் அரண்மனையில் அளிக்கும் சிறு உணவை தனக்கு என்று எடுத்துக்கொள்ளாமல் பிறருக்கு அளித்துவிட்டு அதில் பாதியை குளத்தின் கரையில் நின்று எங்களை இரசித்துக் கொணடே எங்களுக்கும் உணவாக அளித்து வந்தார். அது போல அவருக்குக் கிடைக்கும் எந்த பொருட்களையும் இல்லாதவருக்குக் கொடுத்துவிடுவார். இந்நிகழ்வு நீண்டநாள் நிகழ்ந்துக் கொண்டே இருந்தது. இதனை நான் கவனித்துக் கொண்டே வந்தேன்.

நாட்கள் பல கடந்தன. அவருக்கு வயதும் கடந்து விட்டது. அந்த முதியவர் மெல்ல மெல்ல நடந்து வந்து எங்களுக்கு உணவை வாரி இறைத்தார். அப்போது அந்தப் பக்கம் திடீரென்று வந்த பாம்பு ஒன்று சினம் கொண்டு சீறி அவரைக் கடித்தது. அந்த முதியவர் உயிருக்கு போரடித் துடித்தார். அவரை காப்பாற்றயாரும் வரவில்லை. அருகில் என்ன நிகழ்கின்றது என்று கூடத் தெரியாமல் அவரவர் வேலையை அவரவர் செய்து கொண்டு இருந்தனர். நான் அந்தப் பெரியவருக்கு என்னால் உதவ முடியாமல் போனதை நினைத்து அழுது கொண்டிருக்கிறேன் என்றது மீன்.

மீன் பிடிப்பவன் இதனைக் கேட்டு சிறிது பயந்தான் ஆனால் மீனிடம் அதை வெளிப்படுத்தவில்லை. அவன் மீனைப் பார்த்து... இந்த மனிதர்களே இப்படித்தான் அதற்கெல்லாம் நீ எதற்கு அழுகிறாய் ? என்று கேட்டான்.

அரண்மனையின் சுகங்களை எல்லாம் அனுபவித்துக்கொண்டு மக்களைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாத அரசன், அரசி இருவரும் உண்மையிலேயே மனிதர்கள்தானா என்று நான் நினைக்கிறேன். அவர்களிருவரும் முதியோரை கொத்திய நஞ்சுப் பாம்பினைப் போன்றவர்களே. இந்த நாட்டில் இருக்கும் மனிதர்களும் மனிதாபிமானம் அற்றவர்களாக இருக்காங்களே என்பதை எண்ணிதான் நான் அழுதுக் கொண்டு இருக்கின்றேன். இயற்கை தெய்வம் இவருக்கு என் தண்டனை தரப்போகிறதோ? என்று தான் கண்ட கனவை மீனவனிடம் சொல்லி முடித்த மீன் நீயும் அப்படிப்பட்ட மனித இனத்தைச் சார்ந்தவன்தானே என்று கேட்டது. அதைக் கேட்ட மீனவன் கல் சிலையாக மாறிகாட்சி அளித்தான்.

மீன் போலியாகத் தான் தப்பிப்பதற்காக கனவு கண்டேன் என்று கூறியது. ஆனால் அந்த மனிதன் உண்மையாகவே சிலையாக நின்றான். இந்த உண்மையை நினைத்து மீன் வருந்தியது. பிறகு தண்ணீரில் மீண்டும் தன் வாழ்வை வாழ ஆரம்பித்தது.

மீண்டும் குளக்கரையும் ஆலமரமும் வழக்கமான ஆரவாரங்களோடு இயங்க ஆரம்பித்தது...

பெ.பராசக்தி,
இளங்கலைத் தமிழ்,மூன்றாமாண்டு.

## யானையின் வேறு பெயர்கள்

1. கயம்
2. வேழம்
3. களிறு
4. பிளிறு
5. களபம்
6. மாதங்கம்
7. கைம்மா
8. வாரணம்
9. அஞ்சனாவதி
10. அத்தி
11. அத்தினி
12. அரசுவா
13. ஆனை
14. இபம்
15. இரதி
16. குஞ்சரம்
17. வல்லிவிலங்கு
18. அஞ்சனம்
19. அல்லியன்
20. அனுபவை

மௌனிகா,
இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

# தமிழுக்கு நிறம் உண்டு

"தமிழுக்கு நிறம் உண்டு" இந்நூலின் ஆசிரியர் வைரமுத்து. இந்நூலின் முதற்பதிப்பு 1997 ஆம் ஆண்டும் பத்தாம் பதிப்பு 2010 ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது. தமிழுக்கு நிறமுண்டு இந்நூலை படிக்க தொடங்கும் முன், தமிழைப் பற்றியும், தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றியும் தான் வைரமுத்து கூற போகிறாரோ என்று நமக்கு எண்ணம் தோன்றும். ஆனால் தமிழ்மொழியைப் பற்றி அவர் கூறவில்லை.

வைரமுத்து அவர்கள் தான் சிறுவயதில் கண்டவற்றை, இறைவனிடம் கேட்க விரும்புவற்றை, மற்றும் இயற்கை, சாதி, மதம், இனம் என இவற்றையெல்லாம் தன் பார்வையில் இருந்து பொதுவாக கூறியுள்ளார் வைரமுத்து.

விளக்கில் இருந்து பூதம் வந்தால் அந்த பூதத்திடம் என்ன கேட்பேன் என்று ஒரு பெரிய பட்டியலே போடுகிறார் வைரமுத்து. தமிழ்த்தாயின் பாலை, வைகை நதிப்புலவர்களின் மூளை, ராசராசனின் வாள் என படிப்பவரின் மனதில் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக இருக்கும் இக்கவிதை.

விலங்கிற்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டை விலங்கு என்னும் தலைப்பில் வைரமுத்து கூறியுள்ளார். இக்கவிதையைப் படிப்பவரின் மனதில் முதலில் எழும் எண்ணம் மனிதனாய் பிறந்தது தவறோ! காரணம், விலங்கே மனிதனைக் காட்டிலும் உயர்ந்தது என்ற வைரமுத்தின் கருத்து. சிந்தித்துப் பார்த்தால் விலங்கே மனிதனைக் காட்டிலும் உயர்ந்தது என்று எனக்கு தோன்றியது. படிப்பவர்களுக்கும் இதே கருத்துதான் எழும்.

ஒரு நதியின் விதி என்று அவர் ஊரின் நதியைப் பற்றி வைரமுத்து கூறுகையில் இக்கால தலைமுறையினருக்கு ஒ நதி என்றால் இப்படிதான் இருக்குமோ, இருந்திருக்குமோ என்று படிப்பவரின் மனதை நதி இருந்த காலத்திற்கே கொண்டு செல்கிறார் வைரமுத்து.

**ஒருநாள் ஒருபொழுது**

**உன் மடியில் நானிருந்து**

**திருநாள் காணாமல்**

**செத்தொழிந்து போவேனோ?**

என்று மேகத்தை பார்த்து கேட்கிறார் வைரமுத்து. முத்துகள் பிறக்கும் இடமாக 10 இடங்களை பிற்சேர்கை என்னும் தலைப்பில் கூறியுள்ளார். இங்கு முத்துக்கள் என்பது முத்துக்கள் அல்ல.


நிபந்தனைகள் என்னும் தலைப்பில் தெய்வங்களைப் பற்றி கூறி, இறுதியில் நானும் கோவிலுக்குப் என விமர்சனங்கள் எழுவதற்கு முன்னே முற்றுப்புள்ளி வைக்கிறார்.

இன்பம், இலை, தேடல், என்னோட ராவுகள், ருசி, நீங்கள் வேறு நான் வேறு, என பல தலைப்புகள் மூலம் அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளார் வைரமுத்து.


அ.ஸ்டெல்லாமேரி

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# தூரிகைத் தூரல்கள்



கோ. சுசிபிரியா
தகவல்தொழில்நுட்பவியல்,
இரண்டாமாண்டு




க. நித்யா
தகவல்தொழில்நுட்பவியல் முதலாமாண்டு

# கல்லூரி விழாக்கள்



கல்லூரிப் பேரவை
தொடக்கவிழா

அரசு சாரா தொண்டு
நிறுவனங்களுக்கு
விருது வழங்கும் விழா






சோகா மாணாக்கியப்
பேரவை

தமிழ்த்துறை
ஆய்வரங்கம்




M. நந்தினி
II year B.A. TTH